புகழேந்தி புலவர் அரசு மேல்நிலைப் பள்ளி பொன் விளைந்த களத்தூர்
ஒன்பதாம் வகுப்பு ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. குழுவில் விடுபட்ட வரிசையை தேர்ந்தெடுக்க

| குழு – 1 | குழு – 2 | குழு – 3 | குழு – 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ... ... ... ... .... | ... ... ... ... .... | ... ... ... ... .... | ... ... ... ... .... |

அ)1.வங்கம் 2.மானு 3. தாழிசை 4 பிறவினை
ஆ)1. தாழிசை 2. மானு 3. பிளவினை 4.வங்கம்
இ)1. பிறவினை 2. தாழிசை 3. மானு 4. வங்கம்

2. தமிழ்விடு தூது________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ)சிற்றிலக்கியம்

3.விடுபட்ட இடத்திற்கு பொருத்தமான விடை வரிசையை குறிப்பிடுக
அ) ______இனம் ஆ)வண்ணம்______ இ) ______குணம் ஈ) வனப்பு ______
க) மூன்று, நூறு, பத்து, எட்டு உ) எட்டு, நூறு, பத்து, மூன்று ங) பத்து, நூறு, எட்டு, மூன்று

4. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே இந்த காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே இவ்வரிகளில் பயின்று வரும் நயங்கள்
அ) முரண் , எதுகை, இரட்டை தொடை ஆ) இயைபு ,அளபெடை ,செந்தொடை இ) மோனை, எதுகை, இயைபு

5.அழியா வனப்பு , ஒழியா வனப்பு,சிந்தா மணி- அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் இ) பண்புத்தொகை

6. மிசை என்பதன் எதிர்ச்சொல் என்ன
அ) கீழே ஆ) மேலே இ) இசை

7. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது? அ) அகழி ஆ) புலரி இ) இலஞ்சி

8. பொருத்தமான விடையை தேர்க
அ) நீரின்று அமையாது உலகு - திருவள்ளுவர்
ஆ) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்
இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்
1.அ,ஆ சரி 2. அ,இ சரி 3. ஆ,இ சரி

9. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக
கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக________ அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் __________
அ) வந்தான் , வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை இ) வந்தான், வருவான்

10. மல்லல் மூதூர் வய வேந்தே கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ)மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம்

11. பொருந்தாத இணை எது? அ)ஏறுகோள்- எருது கட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர் இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு

12. முறையான தொடர் அமைப்பினை குறிப்பிடுக
அ)தமிழர்களின் வீர விளையாட்டு தொன்மையான ஏறு தழுவுதல்
ஆ) தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு ஏறு தழுவுதல்
இ) தொன்மையான வீர விளையாட்டு தமிழர்களின் ஏறு தழுவுதல்

13. பின்வருவனவற்றுள் தவறான செய்தியை தரும் தொடர்
அ)அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன
ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறு கோள் குறித்து கூறப்பட்டுள்ளது

இ) எட்டு ,பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது
14. ஐம்பெருங்குழு, எண்பேராயம் சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் அ)திசை சொற்கள் ஆ)உரிச்சொற்கள் இ)தொகைச்சொற்கள்
15. சொற்றொடர்களை முறைப்படுத்துக அ)ஏறுதழுவுதல் என்பதை ஆ)தமிழ் அகராதி இ)தழுவிப்பிடித்தல் என்கிறது
1)ஆ-அ-இ 2)ஆ-இ-அ 3)இ-அ-ஆ
16. தீரா இடும்பை தருவது எது? அ)ஆராயாமை ஐயப்படுதல் ஆ)குணம் குற்றம் இ)பெருமை சிறுமை
17. கீழ்க்காணும் மூன்று தொடர்களும் அ) இருந்த இடத்திலிருந்து பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம் இந்திய தொடர் வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும் ஆ) வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண் வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது
இ)திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டதே ஆகும்
1அ , ஆ ஆகியன சரிஇ தவறு 2 .அ, இ ஆகியன சரி ஆ தவறு 3. மூன்றும் சரி
18.தமிழ் நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வு தேர்வு அ) தேசிய திறனறித் தேர்வு ஆ(ஊரக திறனறித் தேர்வு இ)தேசிய திறனறி கல்வி உதவித்தொகை தேர்வு
19. ஒன்றறி வதுவே உற்றறி இரண்டறி வதுவே அதனொடு நாவே இவ்வடிகளில் அதனொடு என்பது எதனைக் குறிக்கிறது அ) நுகர்தல் ஆ)தொடு உணர்வு இ)கேட்டல்
20.பின்வரும் தொடர்களை படித்து நான் யார்? என்று கண்டுபிடிக்க
அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன் எல்லா கோளிலும் ஏற்றப்படுவேன் இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர் அ) இணையம் ஆ)தமிழ் இ(கணினி
21. விடை வரிசையை தேடுக அ( இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும் ஆ)இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி
1.நேவிக் , சித்தாரா
2) நேவிக் , வானூர்தி 3) சித்தாரா, நேவிக்

22.
1. பொருத்தமான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| அ) சிறுபஞ்சமூலம் | – | 1: காப்பிய இலக்கியம் |
| ஆ) குடும்ப விளக்கு | – | 2. சங்க இலக்கியம் |
| இ) சீவகசிந்தாமணி | – | 3. அற இலக்கியம் |
| ஈ) குறுந்தொகை | – | 4. தற்கால இலக்கியம். |

அ( அ-3ஆ-4இ-1 ஈ-2 ஆ) அ-3ஆ-2 இ-4ஈ-1 இ)அ-2ஆ-3இ-4ஈ-1
23. மாறுபட்டுள்ள குழுவினை கண்டறிக அ(கலைக்கூடம் ,திரையரங்கம், ஆடுகளம் அருங்காட்சியகம் ஆ) வினவினான், செப்பினான், உரைத்தான், பகன்றான் இ)இன்,கூட, கிறு,,அம்பு
24. கீழ்க்கண்டவற்றுள் உணர்ச்சித் தொடர் எது? அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன. ஆ) இந்திய நூலகவியலில் தந்தை என அழைக்கப்படுபவர் யார்? இ)என்ணண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை.
25.சரியான கூற்றினை தெரிவு செய்க

அ) அ என்பது எதிர்மறை இடைநிலை ஆ)வீட்டிற்கு ஒரு புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு இ)வில்லுப்பாட்டு ஒரு இலக்கிய வடிவம்
1.)அ,ஆ சரி இ தவறு 2.அ தவறு ஆ,இ சரி 3.மூன்றும் சரி
26. பூவாது காய்க்கும் மலர்க்கை அடிக்கோட்டிட்ட சொற்களுக்கு உரிய இலக்கணம் யாது? அ)பெயரெச்சம் பண்புத்தொகை ஆ)எதிர்மறை பெயரெச்சம் , உருவகம் இ)எதிர்மறை வினைச்சம் ,உவமைத்தொகை
27.பல்லவர் கால சிற்பக் கலைக்கு சிறந்த சான்று அ)மாமல்லபுரம் ஆ)பிள்ளையார்பட்டி இ)தாடிக்கொம்பு
28.பொதுவர்கள் பொலிவுற ப்போர் அடித்திடும் நிலப்பகுதி அ)குறிஞ்சி ஆ)நெய்தல் இ)முல்லை
29.மரவேர் என்பது______புணர்ச்சி அ(இயல்பு ஆ) திரிதல் இ(கெடுதல்
30.அதிர புகுதக் கனா கண்டேன் யார் கனவில் யார் அதிரப் புகுந்தார் அ)கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள் ஆ)தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
இ) ஆண்டாள் கனவில் கண்ணன் புகுந்தான்.
31.திருநாதர் குன்றில் ஒரே பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை
அ)விலங்கு உருவங்கள் ஆ)தீர்த்தங்கரர் உருவங்கள் இ)தெய்வ உருவங்கள்
32. ஐந்து சால்புகளில் இரண்டு அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும் இ) இணக்கமும்
33. இந்திய தேசிய ராணுவத்தை______ இன் தலைமையில்_______ உருவாக்கினர்.
அ)சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ)மோகன் சிங், ஜப்பானியர் இ)மோகன் சிங், இந்தியா
34. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது? அ) வருக்கை - இருக்கை ஆ) அள்ளல்-சேறு இ) புள் - தாவரம்
35. இளங்கமுகு செய்கோலம் இலக்கண குறிப்பு தருக
அ) உருவகத் தொடர், வினைத்தொகை ஆ) பண்புத்தொகை , வினைத்தொகை இ) வினைத்தொகை , பண்புத்தொகை
36. நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல் யானை கோக்கிள்ளி நாடு தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே
அ) பாண்டியநாடு , சேர நாடு ஆ) சேர நாடு, சோழ நாடு இ) சோழ நாடு, சேர நாடு
37. வெறி கமழ் கழனியுள் ஆளுநர் வெள்ளமே இவ்வடி உணர்த்தும் பொருள் யாது? அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர் ஆ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய் கூடி இருந்தனர் இ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்த ரன்.
38.கூற்று: இந்திய தேசிய ராணுவப்படை தலைவராக இருந்த தில்லான் “இந்திய தேசிய ராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்” என்றார்.
காரணம் : இந்திய தேசிய ராணுவத்திற்கு வலு சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்
அ) கூற்று சரி காரணம் சரி ஆ) கூற்று தவறு காரணம் சரி இ) கூற்று சரி காரணம் தவறு